திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவரவர்களே, தென்னார்க்காடு மாவட்டத்தில் ஓர் வரி என்று தெரிவித்தார்கள். அது எந்த வரி என்று அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தத் துணை வினா, மூல வினாவை ஒட்டியதாக இல்லாமலிருப்பதால் இதை அனுமதிக்க முடியவில்லை. வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

2. அமைச்சரின் விளக்கம்.

துணை வினாவின்–விடைக்குத் திருத்தம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 173-வது வினாவிற்கு விடை அளித்த மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் ஒரு துணை வினாவிற்கு அளித்த விடையில் ஒரு திருத்தம் செய்ய விரும்புகிறார்கள். அதை அனுமதிக்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : சேலம் மாவட்டத்தைப் பற்றி ஒரு விவரம் கேட்டார்கள். முதலில் இந்தக் குறிப்பு என்னிடம் இல்லாத காரணத்தினால் அந்தக் குறிப்பை இப்போது கூற விரும்புகிறேன்.[a] சேலம் மாவட்டத்தில் உள்ள குளங்கள், இப்போது புதிதாக அமைக்கப்பட்ட குளங்கள் இரண்டு. ஒன்று, செம்மலை சிவிலிக்கரடு, ஓமலூர் தாலுகாவில். இன்னொன்று, கன்னாரப்பனை கிராமத்தில் உள்ளது.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

3. கவன ஈர்ப்பு.

குமரி மாவட்டத்தில் பருவமழையின்மையும், வரிகள் தள்ளுபடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். பொன்னப்ப நாடார் அவர்கள் 41-வது விதியின்கீழ், உணவுத்துறை அமைச்சரவர்களின் கவனத்தை ஈர்க்க ஒரு தீர்மானத்தைக் கொண்டு வருவார்கள்.

THIRU R. PONNAPPA NADAR : Sir, I call the attention of Hon. the Minister for Food to a matter of urgent public importance, namely withering of crops in Kanyakumari district due to the failure of monsoon and the need for remission of land revenue and water-cess and also adequate supply of foodgrains to tide over the crisis in the ensuing lean months of this year.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : பேரவைத் தலைவரவர்களே, பருவமழை பொய்த்ததன் காரணமாக கன்னியாகுமரி மாவட்டத்தில் பயிர்கள் கருகிக் கொண்டிருப்பதாகவும், அதனால் நிலவரியையும், தண்ணீர் வரியையும் தள்ளுபடி செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதென்றும், உணவு தானியங்கள் போதுமான அளவு வழங்கப்பட வேண்டுமென்றும் நாட்ட ஈர்ப்பு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

பயிர் விளைந்து கொண்டிருந்த 65,000 ஏக்கரில், 20,000 ஏக்கர் நெற்பயிர்கள் வடகிழக்குப் பருவமழை பொய்த்ததன் காரணமாகக் கருகிவிட்டன. கிட்டும் நீரைக் கொண்டு முறைமாற்று வழிகளில் தண்ணீர் பாய்ச்சி, பயிர்கள் மேலும் கருகாமலிருக்க நடவடிக்கைகள்

---

[a] 109-ம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க